



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓ DIGITAL MARKETING
✓ WEB DEVELOPMENT
✓ SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| VOLUME : 01 | ISSUE: 317 | 10.05.2026 | SUNDAY | CHITHIRAI: 27 | PRICE : RS.5/- |
| மலர் : 01 | இதழ் : 317 | 10.05.2026 | ஞாயிற்றுக்கிழமை | சித்திரை : 27 | விலை : ரூ.5/– |


# "தடைகளைத் தகர்த்து அமைகிறது தவெக ஆட்சி!"

சென்னை, மே.10-

ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை எண்ணிக்கையுடன் ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை, தவெக தலைவர் விஜய் நேற்று (சனிக்கிழமை) மாலை சந்தித்ததை அடுத்து, ஆளுநர் அவரை ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பதும், இன்று மாலை 3.15 மணிக்கு சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் விஜய் முதல்வராக பதவியேற்க இருப்பதும் உறுதியாகியுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளான மே.4ம் தேதி காலை 9.30 மணி முதலே விசில் சத்தம் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. திமுகவும், அதிமுகவும் அந்நேரம் இரண்டாம் இடத்துக்கு திணறிக் கொண்டிருக்க, தவெக க்ளீன் ஸ்வீப் ஆகுமோ என்ற விவாதங்கள் டிவி மீடியாக்களில் காரசாரமாக ஓடிக் கொண்டிருந்தன. ஆனால், மாலையில் வாக்கு எண்ணிக்கை முடிந்தபோது தவெக 108, திமுக கூட்டணி 73, அதிமுக கூட்டணி 53 என எண்கள் நின்றன. பிரதமரும், ராகுல் காந்தியும் வாழ்த்துகளை வாரி வழங்கினர்.

இருந்தாலும், தமிழகத்தில் தொங்கு சட்டப்பேரவை நிலை அது. தவெக தான் எதிர்கொண்ட முதல் தேர்தலிலேயே 59 ஆண்டு கால திராவிடக் கட்சிகளுக்கு ஷாக் கொடுத்து தனிப்பெருங்கட்சியாக உருவெடுத்தது என்றாலும் கூட பெரும்பான்மை எண்கள் இல்லாததால் ஆட்சியமைக்க முடியாது என்ற ஷாக் அதற்கு அடித்தது. கொண்டாட்டங்களுக்கு ஒரு ஸ்பீடு பிரேக் விழுந்தது.

அப்போதுதான் தமிழக அரசியல் களம் இன்னும் இன்னும் சூடுபிடித்தது. தவெகவும் எண் வேட்டையை தொடங்கியது.

பெரிதும் மெனக்கிடாமலேயே காங்கிரஸ் கட்சி தவெகவுக்கு வந்தது. பிரவீன் சக்கரவர்த்தியின் தேர்தலுக்கு முந்தைய பேச்சுக்கள், தமிழகம் வந்தும் ராகுல் காந்தி ஸ்டாலின் ஒரே மேடையில் பிரச்சாரம் செய்யாதது, அதன்பின்னர் விஜய்யே 'ரியல் காங்கிரஸ்' எங்களோடுதான் என்று பேசியது எல்லாமே காங்கிரஸ் நிச்சயம் தவெக பக்கம் தாவும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்ததால் அது அவ்வளவு பெரிய ஹைலைட் ஆகவில்லை. அதுவும் ஆதரவுக் கடிதத்தில், காங்கிரஸ் பல பத்தாண்டுகளுக்கு செயல்படுவோம் என்று சொல்லிவிட்டது. எக்காலத்தில் மதவாத சக்திகளோடு கூட்டணி கூடாது என்ற ஒற்றை நிபந்தனையை மட்டுமே வைத்தது.

காங்கிரஸின் நகர்வு தேசிய அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்த இனி மக்களவை யில்கூட அவர்கள் அருகில் சீட் வேண்டாம் என்று கனிமொழி கடிதம் எழுத, அகிலேஷ் யாதவ் நான் இருக்கேன் உங்களுக்கு என ஆறுதல் கூற, தேசிய அளவில் இண்டியா கூட்டணி அடுத்த பரிணாம வளர்ச்சிக்கு தயாராகிவிட்டது.

தவெகவின் வெற்றி தேசிய அரசியல் வரை எதிரொலிக்க,



ஆஹா மவுசு கூடுதே என்று விசிலர்கள் குதூகலிக்க விஜய் காங்கிரஸ் ஆதரவுக் கடிதத்தோடு ஆளுநர் மாளிகைக்கு சென்றார்.

அந்த ஆதரவுக் கடித்தோடு சென்று, "எங்களை ஆட்சி அமைக்க அழையுங்கள்," என்று கோரியபோதுதான் விஜய்க்கு உண்மையான சிக்கல் ஏற்பட்டு அது ஹைலைட் செய்தியானது. காரணம் அவர் தனிப்பெருங்கட்சி என்று சொல்லியிருந்தால் ஆளுநர் ஆட்சி அமைக்க அழைத்திருப்பார்; ஆனால் கூட்டணி ஆட்சி என்று சொல்லி காங்கிரஸ் ஆதரவுக் கடிதத்தையும் ஆளுநரிடம் வழங்க அதனால் அவர் 118 நம்பர் காட்டுங்க என்று அனுப்பிவிட்டார்.

முதலாம் சந்திப்பு இப்படியாக முடிய. தொடர்ந்து இடதுசாரிகள் ஆதரவுக் கடிதங்களோடு ஒரு முறை என மொத்தம் 3 முறை ஆளுநர் மாளிகைக்கு சென்றுவந்துவிட்டார் விஜய். ஆனால் நம்பர் தான் முக்கியம் என்று ஆளுநரும் திருப்பியனுப்ப, இன்று இறுதியாக விசிக, ஐயூஎம்எல் என அடுத்தடுத்து ஆதரவுக் கடிதங்கள் வர 4வது முறையாக 'எண் தானே வேண்டும் இப்போது 120 உள்ளது,' என்று கம்பீரமாக கார்கள் புடைசூழ புறப்பட்டுச் சென்றார் விஜய். முதலில் ஆளுநர் மாளிகையை நெருங்கிய போதே, "அப்படியே யுடர்ன் அடித்துச் செல்லுங்கள், ஆளுநர் கேரளா செல்கிறார்," என்று திருப்பியனுப்பபட்டார் விஜய்.

அதுபோதாதா... ஊடகங்களும், சமூக ஊடங்களும் ஆளுநர் அனுமதிக்கவில்லை அடுத்தது என்ன என முழங்க. அப்படியான முழக்கங்கள் வந்து கொண்டிருக்கும்போது ஆளுநர் மாளிகையிலிருந்து விஜய்க்கு அதிகாரப்பூர்வ அழைப்பும் வர அவர் ஆளுநரை சந்திக்க மீண்டும் சென்றார்.

ஒருத்தர் ஆட்சியமைக்க உரிமை கோரவே கஜினி முகமதுபோல் படையெடுக்கிறாரே என்று உச்.. உச் பரிதாபங்களும், நல்லா வேண்டும் என்ற நையாண்டிகளும், டெல்லி சதி, திமுக சதி என்ற கூப்பாடுகளும் டீக்கடை முதல் இன்ஸ்டா கடை வரை அதிர்ந்தது.

இதற்கிடையில் அமமுக எம்எல்ஏ காமராஜ் ஆதரவுக் கடிதம் கொடுத்ததாக தவெகவினர் ஆளுநரிடமே கொண்டு போக, அது போலி என்று டிடிவி சொல்ல, குதிரை பேரம் என்று பேட்டிக் கொடுக்க அது எப்போ என்ன சிக்கலை விஜய்க்கு செய்யுமோ தெரியவில்லை என்று பரபரப்பு வேறு. சந்திப்பு நிறைவடைய காலதாமதம் ஆக அதில் ட்விஸ்ட் வருமோ என்ற கலக்கமும் தவெக ஆதரவாளர்களுக்கு ஏற்பட, நாளை மதியம் 3.15 மணிக்கு விஜய் முதல்வராக பதவியேற்பார் என்று ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் கூறுகின்றன. அதே, நேரு உள் விளையாட்டு அரங்கில் என்று சொல்லப்படுகிறது.

இருப்பினும், விக்கிரவாண்டியில் விஜய் திமுக என் அரசியல் எதிரி, பாஜக எனது கொள்கை எதிரி என்று சொல்லி நேரா கோட்டைக்குத் தான் என்று அக்டோபர் 27, 2025ல் சொன்னதில் இருந்து இன்று மே.9 ஆளுநர் அவரை ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தது வரை, ஒரு ஃபுல் லெந்த் பக்கா மாஸ் அரசியல் படம் எடுக்கும் அளவுக்கு சம்ப்வங்கள் நடந்துவிட்டன.

விஜய்க்கு கூடிய கூட்டங்கள் எல்லாம் ஓட்டாக மாறாது என்று சொல்லப்பட்ட நிலையில் அது ஓட்டுகளாக மாறியிருக்கிறது. அப்படி ஓட்டுக்களாக மாற பல ஆண்டுகளாகவே சமூக ஊடகங்களில் 'தி ரூட்' நிறுவனத்தின் தலைவரும், விஜய்யின் மேலாளருமான ஜெகதீஷ் பழனிசாமி தான் இருக்கிறார். தவெகவின் இந்த வெற்றி ஆர்கஸ்ட்ரேடட் வெற்றி என்று சொல்லப்படும் நிலையில், அதுபற்றி பெரிய அளவில் விவாதங்கள் ஒருபுறம் நடப்பதை இங்கு சுட்டிக் காட்டாமல் செல்ல இயலாது.

விஜய்க்கு கரூர் சம்பவமும், தனிப்பட்ட வாழ்வில் மனைவி விவாகரத்து கோரி அந்த மனுவில் நடிகை விவகாரத்தைக் குறிப்பிட்டதும் அவருக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் என்று பேசப்பட்டது. ஆனால் அது தேர்தலில் எதிரொலிக்கவில்லை. அது எதிரொலிக்காதவாறு பார்த்துக் கொண்டதுதான் இளைஞர்களை குறிவைத்து காய்நகர்த்தியது தான் 'தி ரூட்' போட்டுத்தந்த மேப்பின் வெற்றி என்கிறார்கள்.

விஜய் வடக்கு மண்டலத்தில் தான் சோபிப்பார், தெற்கு, மத்திய மண்டலங்களிலெல்லாம் வாய்ப்பே இல்லை என்று சொல்லப்பட்ட நிலையில் மண்டலம் தாண்டி விசில் பறந்தது.

அதன்பின்னர் பெரும்பான்மைக்கு போராடும்போது கட்சி அலுவலகங்களுக்கு நிர்மல் குமாரும், அருண் ராஜூம், ஆதவ் அர்ஜூனாவும், புஸ்ஸி ஆனந்தும் தான் சென்றுவந்தனரே தவிர விஜய் ஆளுநர் மாளிகைக்கு மட்டுமே ஸ்டண்டிங் அடித்துக் கொண்டிருந்தார்.

ஆனாலும் தன் கொள்கை எதிரி பாஜக கூட்டணியிடம் போகாமல் அரசியல் எதிரி, தீய சக்தி என்று அவர் மேடைக்கு மேடை முழங்கிய திமுக கூட்டணி தான் அவரைக் காப்பாற்றி அவருக்கு பெரும்பான்மை பலத்தைக் கொடுத்திருக்கிறது.

ஆளுநர் மாளிகைக்கு ஆட்சி அமைக்க உரிமை கோரி இமெயில் அனுப்பியது, புரோட்டோகாலே தெரியாமல் அவரை வெறுங்கையுடன் பார்க்கச் சென்றது, பெரும்பான்மைக்கு ஆதரவு தருமாறு வாட்ஸ் அப்பில் கோரிக்கை விடுத்தது, விஜய் பதவியேற்க ஆளுநர் மத்திய அரசின் ஆணைப்படி சதி செய்கிறார் என்று எல்லோரும் கதற மவுனியாக இருந்தது என்று மக்கள் தீர்ப்பு வழங்கிய மே 4 தொடங்கி இதுவரையில் விஜய் காத்த மவுனம் ஒரு புறம் அவர் இப்பவே எக்ஸ்போஸ் ஆயிட்டார் என்றும் மறுபுறம் விஜய் இத்தனை நெருக்கடியையும் மவுனியாக சமாளித்த வித்தைக்காரர் என்றும் விமர்சனங்கள் வருகின்றன.

'லெட் மீ டெல் ஏ குட்டி ஸ்டோரி' என்று இனி விஜய் இந்த ஸ்டோரியையே சொல்லலாம் போல!

என்ன, தான் யாரை எதிரி என்று சொன்னாரோ அவர்களிடமிருந்தே ஆதரவு வந்ததும், "எப்பப் பார்த்தாலும் பாசிஸம், பாயாசம் என்கிறீர்களே" என்று அடித்த கிண்டலுக்கு அரசியல் கெடுபிடிகள் பாடம் கொடுத்ததையும் சேர்த்தே அந்தக் கதையில் வருமா என்று பார்ப்போம்.





## புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி: தமிழகத்தில் மே 12 முதல் எங்கெல்லாம் கனமழை தீவிரம்?

சென்னை, மே.10–

தென்மேற்கு வங்கக் கடலில் 11ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகிறது. இதன் காரணமாக 12ம் தேதி முதல் தமிழகத்தில் கனமழை தீவிரமடைகிறது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய கேரள கடல் பகுதிகளுக்கு அப்பால் உள்ள லட்சத்தீவு பகுதிகளின் மேல் சுமார் 1.5 கி.மீ. உயரத்தில், ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

மேலும், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி சுமார் 5.8 கிமீ உயரம் வரை நிலவுகிறது. இதன் காரணமாக தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் 11ம் தேதி வாக்கில் ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்.

மரத்வாடா முதல் கடலோர கர்நாடகா, வட உள் கர்நாடகா மற்றும் மத்திய மகாராஷ்ட்ரா வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக இன்று (மே 10) தென் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், 11 தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 12ம் தேதி ஓரிரு இடங்களிலும், 13ம் தேதி வட தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 14, 15 தேதிகளில் பெரும்பாலான இடங்களிலும் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளையும், நாளை மறுதினமும் ராமநாத புரம், கன்னி யாகுமரி, திருநெல்வேலி, மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

12ம் தேதி நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், 13ம் தேதி சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக் குறிச்சி, கடலூர், மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், மதிருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

14ம் தேதி திருவண்ணாமலை, விழுப்புரம், மயிலாடுதுறை, கடலூர், தஞ்சாவூர் மாவட்டங்கள், மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும். சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருப்பத்துர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், ராணிபேட்டை, வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும்.

15ம் தேதி கோவை, மதுரை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், மற்றும் நாமக்கல் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை முதல் 13ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை குறையக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 75 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 17 செமீ, நாலுமுக்கில் 16 செமீ, காக்காச்சியில் 14 செமீ, மாஞ்சோலையில் 11 செமீ, தென்காசி மாவட்டம் ஆயிக்குடியில் 9 செமீ, தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் 9 செமீ, தென்காசி மாவட்டம் கருப்பாநதி அணை, தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம், தென்காசி மாவட்டம் செங்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் தலா 7 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "தவெகவை ஆதரிக்க திருமாவளவன் தயங்குவது பேரம் பேசுவதாலா?" - தமிழிசை



சென்னை, மே.10–

கம்யூனிஸ்டுகளுடன் ஒட்டுமொத்தமாக முடிவை தெரிவிப்பதாக கூறிவிட்டு திருமாவளவன் தற்போது ஏன் தயங்குகிறார்? என்ன பேரம் பேசிக் கொண்டிருக்கிறார் என பாஜக மூத்த தலைவர் தமிழிசை கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், "தொடர்ந்து மூன்று முறை முழுமையான எண்ணிக்கை இல்லாத காரணத்தினால், விஜய் ஆளுநரை சந்தித்த பிறகும் ஆளுநர் அவரை திருப்பி அனுப்பியிருக்கிறார். நீங்கள் ஆட்சி அமைப்பதற்கான எண்ணிக்கையோடு வாருங்கள், நாங்கள் அனுமதி தருகிறோம் என ஆளுநர் மாளிகை தெளிவாகச் சொல்கிறது. எண்ணிக்கை இல்லாமல் சென்றுவிட்டு, ஆளுநர் மீது பழி போடுவது எந்த விதத்திலும் நியாயமில்லை.

இத்தனை மதிப்பெண்கள் வாங்கினால் தான் தேர்வாக முடியும் என்ற தேர்வு இருக்கும்போது, அந்த எண்ணிக்கை இல்லாமலேயே என்னை தேர்வு செய்யுங்கள் எனச் சொல்வது தவறு; அது மக்களின் நம்பிக்கையை பெற்றதாக ஆகாது.

தனிப்பெரும் கட்சியை ஆட்சியமைக்க அழைக்க வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் சொல்லிவிட்டு, அதற்கு பின்னால் இருந்து பல முட்டுக்கட்டைகளை போடுகிறார். ஆக, வெளித்தோற்றத்தில் விஜய்யை ஆதரிப்பதுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்திவிட்டு, எல்லாரும் முட்டுக்கட்டை போடுகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் ஆதரவை தெரிவித்துவிட்டு, மத்தியில் இருந்து பாஜக ஆளுநருக்கு அழுத்தம் தருகிறது என சொல்கிறார்கள்; அதிலும் உண்மை இல்லை. திருமாவளவனின் ஆதரவுக்காக காத்திருக்கிறோம் என சொல்கிறார்கள். கம்யூனிஸ்டுகளுடன் ஒட்டுமொத்தமாக முடிவை தெரிவிப்பதாக கூறிவிட்டு திருமாவளவன் தற்போது ஏன் தயங்குகிறார்? என்ன பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்.

காங்கிரஸ் ஒட்டுமொத்தமாக திமுகவிடமிருந்து தனது நட்பை முறித்துக் கொண்டது. இவர்களெல்லாம் அரசியல் சுயலாபத்துக்காக முடிவுகளை எடுத்துவிட்டு ஆளுநர் மீதும், பாஜக மீதும் பழி சொல்வது எந்த விதத்திலும் நியாயம் இல்லை" இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

இதனிடையே, தனது மற்றொரு எக்ஸ் தளத்தில், "தமிழ்நாட்டில் புதிய ஆட்சி அமைய வேண்டும் என்பதில் அத்தனை பேருக்கும் அக்கறை இருக்கிறது. அந்த ஆட்சி நிலையானதாகவும் இருக்க வேண்டும் என்பதிலும் அக்கறை இருக்கிறது. அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் தமிழக அரசியலில் நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதும் உண்மை.

மக்களின் தீர்ப்பு மதிக்கப்பட்டு கொண்டிருக்கிறது அதனால் தான் பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதும் உண்மை. ஆனால் ஆக்கபூர்வமாகவும் உண்மை பூர்வமாகவும் எதிர்கொள்ள வேண்டிய இன்றைய அரசியல் சூழலை... உணர்ச்சிபூர்வமாக மாற்றி பல தொண் டர்கள் நடந்து கொள்வது கவலை அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

விடுதலை சிறுத்தைகள் கட்சி வாசலில் சகோதரர் ஒருவர் பிளேடால் வெட்டிக் கொள்வதும் வள்ளியூரில் ஒருவர் தீக்குளிக்க முயன்று அவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருப்பதும் கவலையளிக்கக் கூடியதாக இருக்கிறது.

உடனடியாக தனது ஆதரவாளர்களுக்கு விஜய் ஒரு செய்தியை வெளியிட வேண்டும் தங்களுக்கு வாக்களித்த மக்களும் ஆதரவாளர்களும் அமைதி காக்க வேண்டும் என்றும் எந்த ஒரு ஆபத்தான முடிவுக்கு வரக்கூடாது என்பதையும் அன்பான வேண்டுகோளாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 10-ம் தேதி ஐபிஎல் போட்டி: மெட்ரோ ரயில்களில் ரசிகர்களுக்கு இலவச பயணம்



சென்னை, மே.10–

சென்னையில் நடைபெறும் ஐபிஎல் போட்டியைக் காண வரும் ரசிகர்களின் வசதிக்காக, போட்டி நடைபெறும் நாளன்று மெட்ரோ ரயில்களில் இலவசமாக பயணிக்கலாம் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நடப்பு ஐபிஎல் தொடரின் 53வது லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் வரும் மே 10ம் தேதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் மோதவுள்ளன.

இதையொட்டி, ரசிகர்களுக்கு தடையற்ற பயண அனுபவத்தை வழங்கும் நோக்கில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சிஎஸ்கே உடன் இணைந்து சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது.

அதன்படி, மே 10 அன்று நடைபெற உள்ள போட்டிக்கான ஸ்பான்சர் டிக்கெட் (நுழைவுச்சீட்டு) வைத்திருக்கும் ரசிகர்கள், சென்னையில் செயல்பாட்டில் உள்ள எந்த வொரு மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்தும் மைதானத்துக்கு அருகிலுள்ள அரசினர் தோட்டம் மெட்ரோ நிலையத்துக்கு எவ்வித கட்டணமும் இன்றி பயணிக்கலாம். ரசிகர்கள் தங்களின் நுழைவுச்சீட்டில் உள்ள பிரத்தியேக க்யூஆர் குறியீட்டை மெட்ரோ நிலையங்களில் உள்ள தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து பயணத்தைத் தொடங்கலாம்.

இந்தச் சலுகையானது ஒருமுறை சென்று வருவதற்கான இரண்டு நுழைவு மற்றும் இரண்டு வெளியேறுதல்களை உள்ளடக்கியது. மேலும், போட்டி நடைபெறும் நாளன்று மெட்ரோ ரயில் சேவைகள் ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணையின்படி இயக்கப்படும்.

ரசிகர்கள் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## "விஜய் ஆட்சி அமைத்தால் தமிழகத்துக்கே பேரழிவு" டிடிவி தினகரன் காட்டம்

சென்னை, மே.10–

"முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல்வராகவே ஃபோர்ஜரி செய்கிறார்கள். ஒரு எம்எல்ஏ தானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய்திருக்கின்றனர்" என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

சென்னையின் அவர் இன்று அடையாறில் இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "காமராஜ் கையெழுத்திட்டதாக வெளியான வீடியோ எங்கு எடுக்கப்பட்டது? காமராஜ் கையெழுத்திடுவது போன்ற வீடியோவை எடுத்தது யார்? விஜய்யா, ஆனந்தா, செங்கோட்டையனா?

அந்த வீடியோ ஏஐ ஆக கூட இருக்கலாம். ஏஐ மூலம் என்ன வேண்டுமானாலும் உருவாக்கலாம். நகல் கடிதத்தை ஆளுநரிடம் கொடுத்தபோது, அசல் கடிதம் எங்கே என அவர் கேட்டிருக்கிறார். அதற்கு தவெகவினர் தருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டனர். அது மோசடி வீடியோ என ஆளுநரிடம் கூறி விட்டோம்.

முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல்வராகவே ஃபோர்ஜரி செய்கிறார்கள். தவெகவினர் என்னை மிரட்ட, பயமுறுத்தப் பார்க்கின்றனர். எனது ஒப்புதலுடன் கடிதம் கொடுக்கப்பட்டதாகக் கூறி குழப்பத்தை ஏற்படுத்த பார்க்கின்றனர். என்னை பயமுறுத்தலாம் என பார்க்கின்றனர். எவ்வளவோ நெருக்கடிகளைப் பார்த்தவன் நான். போலி ஆதரவு கடிதம் விவகாரத்தை சும்மா விடமாட்டேன்.

தீயசக்தி எல்லாம் தாண்டி தற்போது தவெக தமிழ்நாட்டுக்கு அழிவு சக்தியாக வந்து நிற்கிறது. தமிழ்நாட்டை அழிக்க வந்த சக்தி. ஆட்சிக்கு வரும் முன்பே திமிராக, அகங்காரமாக ஒரு எல்எல்ஏ தானே என மோசடி கடிதம் தருகிறார்கள்.

ஒரு எம்எல்ஏ தானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய்திருக்கின்றனர். விஜய் ஆட்சி அமைத்தால், அது தமிழகத்துக்கு பேரழிவை ஏற்படுத்தும். ஆட்சி அமைக்கவே இவ்வளவு ஃபோர்ஜரி வேலைகள் செய்கிறார்கள்" என்று தினகரன் கூறினார்.

## புதுச்சேரியில் ஆட்சி அமைக்க அனுமதி கோரி ஆளுநரிடம் கடிதம்: 13ம் தேதி முதல்வராக ரங்கசாமி பதவியேற்கிறார்



புதுச்சேரி, மே.10–

புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக ரங்கசாமி தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநரிடம் கடிதம் அளித்தார். வரும் 13ம் தேதி முதல்வராக அவர் பதவியேற்கிறார்.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 18 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள என்ஆர்.காங்கிரஸ் 12, பாஜக 4, அதிமுக, லஜக முறையே ஒரு இடத்தில் வெற்றி பெற்றுள்ளன.

புதுச்சேரியில் உள்ள 30 எம்எல்ஏக்களில் ஆட்சி அமைக்க 16 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை. அதேநேரம் தற்போது தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 18 எம்எல்ஏக்கள் பலம் உள்ளதால் மீண்டும் ரங்கசாமி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைய உள்ளது.

ஏற்கெனவே கடந்த 3 நாட்களுக்கு முன் என்ஆர்.காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை கட்சித்தலைவராக ரங்கசாமி தேர்வு செய்யப்பட்டார். அதே போல் பாஜகவின் சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக நமச்சிவாயம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

என்டிஏ கூட்டணி அமைச்சரவையில் பாஜவுக்கு எத்தனை அமைச்சர்கள் என்ற முதல் கட்ட பேச்சுவார்த்தை நடந்தது. இதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. அதைத்தொடர்ந்து, புதிய ஆட்சி அமைய முதல்வர் பதவியை ரங்கசாமி தனது பதவியை ராஜினாமா செய்து, துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனிடம் நேற்று முன்தினம் கடிதம் அளித்தார்.

இதைத்தொடர்ந்து நேற்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், பாஜக மேலிடப் பொறுப்பாளர் மன்சுக் மாண்டவியா, ரங்கசாமி, பேரவையின் பாஜக தலைவர் நமச்சிவாயம், அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன், லட்சிய ஜனநாயக கட்சித் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் மற்றும் என்டிஏ கூட்டணி எம்எல்ஏக்கள் பங்கேற்றனர்.

இதில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக ரங்கசாமி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். ரங்கசாமி ஆட்சி அமைக்க பாஜக, அதிமுக, லஜக கட்சிகள் ஆதரவுக் கடிதங்களை வழங்கின. கூட்டத்துக்கு பின் ரங்கசாமி கூறும்போது, "ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநரை சந்திக்கவுள்ளேன்.

அதன்பிறகு பதவியேற்பு விழா தேதி பற்றி முடிவு செய்யப்படும். அமைச்சர்கள் பதவி யார் யாருக்கு, எந்தக் கட்சியினருக்கு என்பது பதவி தரும்போது தெரியும். பேரவைத் தலைவர் யார் என்பதையும் பிறகு தெரிவிக்கிறேன்" என்றார்.

என்டிஏ எம்எல்ஏக்கள் தரப்பில் விசாரித்தபோது, "வரும் 13ம் தேதி ஆளுநர் மாளிகையில் நடைபெறும் விழாவில் முதல்வர் ரங்கசாமி பதவியேற்க முடிவு எடுத்துள்ளார்" என்று தெரிவித்தனர். இதுதொடர்பான முறையான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று தெரிவித்திருந்தனர்.

பாஜக அழுத்தம்

மேலும் கட்சி வட்டாரங்களில் விசாரித்தபோது, மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியாவும் ரங்கசாமியும் தனியாக பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது கடந்த முறையை போல பேரவைத் தலைவர், இரு அமைச்சர்கள் பதவிகளை தங்களுக்கு வழங்கும்படி பாஜக தரப்பில் வலியுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நேற்று மாலை தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்க உரிமைக்கோரி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனிடம் முதல்வர் ரங்கசாமி கடிதம் அளித்தார். என்.ஆர்.காங்கிரஸ், பாஜக, அதிமுக, லஜக எம்எல்ஏக்கள் அப்போது உடனிருந்தனர்.

இச்சந்திப்புக்கு பிறகு முதல்வர் ரங்கசாமி செய்தியாளர்களிடம் கூறும்போது, "புதுச்சேரியில் என்டிஏ ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கக்கோரி ஆளுநரிடம் கடிதம் அளித்துள்ளேன். வரும் 13ம் தேதி காலை முதல்வராக பதவி ஏற்கிறேன்" என்றார்.

தொடர்ந்து பாஜக மாநிலத்தலைவர் வி.பி. ராமலிங்கம் கூறுகையில்,"ஏற்கெனவே கடந்த என்டிஏ கூட்டணியில் இருந்தது போல் புதிதாக அமையும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் பாஜகவுக்கு பேரவைத்தலைவர், இரு அமைச்சர்கள் தர கோரியிருந்தோம்.பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது" என்றார்.

இதைத் தொடர்ந்து, துணைநிலை ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில், "புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள, என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி ஆளுநர் கைலாஷ்நாதனை சந்தித்தார்.

அப்போது புதுச்சேரியில் ஆட்சி அமைக்க உரிமை கோரி எம்எல்ஏக்களின் ஆதரவு கடிதத்தை அளித்தார். கடிதம் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம்: ஐகோர்ட் உத்தரவு



மதுரை, மே.10–

மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்யும் தொழிலாளர் ஆய்வாளரின் உத்தரவுக்கு எதிராக மின்வாரியம் தாக்கல் செய்த மேல்முறையீடு மனுக்களை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவால் தொழிலாளர் ஆய்வாளர் வழங்கிய பணிநிரந்தர ஆணைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

மதுரை, தேனி, தூத்துக்குடி, விருதுநகர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மின்சார வாரியத்தில் குழி தோண்டுதல், மின்கம்பிகள் அமைத்தல், பழுது நீக்குதல் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகளில் 1998 முதல் 2014 வரை ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணிநிரந்தரம் கோரி தொழிலாளர் ஆய்வாளரிடம் மனு அளித்தனர்.

இதை விசாரித்த தொழிலாளர் ஆய்வாளர், ஒப்பந்தத் தொழிலாளர்கள் மின்வாரியத்தில் 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து பணியாற்றி இருப்பதால் அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என உத்தரவிட்டது.

இதை எதிர்த்து, மின்வாரியம் சார்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுக்களை நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். மின்சார வாரியம் சார்பில், ஒப்பந்தத் தொழிலாளர்கள் நேரடியாக வாரியத்தால் பணியமர்த்தப்படவில்லை.

அவர்கள் ஒப்பந்ததாரர்கள் மூலமே நியமிக்கப்பட்டனர். பணிநிரந்தரம் கோரும் தொழிலாளர்கள் தொழிலாளர் நீதிமன்றத்தை தான் அணுக வேண்டும். தொழிலாளர் ஆய்வாளருக்கு இதற்கு அதிகாரம் இல்லை.

இவர்கள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டதால் இவர்களுக்கு பணிநிரந்தரச் சட்டம் பொருந்தாது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் நீதிபதி பிறப்பித்த உத்தரவு: பணிநிரந்தரச் சட்டத்தின்படி, ஒரு தொழிலாளர் 480 நாட்கள் பணியாற்றினாரா என்பதை ஆய்வு செய்து, அவருக்குப் பணி நிரந்தரம் வழங்கத் தொழிலாளர் ஆய்வாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

தொழிலாளர்கள் மேற்கொண்ட குழி தோண்டுதல், மின் கம்பம் நடுதல் உள்ளிட்ட பணிகள் கட்டுமானப் பணிகள் அல்ல, அவை மின்வாரியத்தின்நிரந்தரமான மற்றும் அத்தியாவசியப் பணிகள் ஆகும்.

ஏற்கெனவே இதே போன்ற சூழலில் இருந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுப்படி பணிநிரந்தரம் வழங்கப்பட்டது.

எனவே, இந்தத் தொழிலாளர்களுக்கும் அதே பலனை வழங்குவது அவசியமானது என தெரிவித்து, மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. தொழிலாளர் ஆய்வாளர் வழங்கிய பணிநிரந்தர ஆணைகள் உறுதி செய்யப்படுகின்றன. இவ்வாறு நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.



# தவெகவுக்கு விசிக ஆதரவு அளிக்க 2 காரணங்கள்... திருமாவளவன் விவரிப்பு

சென்னை, மே.10–

தமிழகத்தில் நிலவும் அரசியல் சூழலைப் பயன்படுத்தி குடியரசுத் தலைவர் ஆட்சி வரக் கூடாது, 108 இடங்களைப் பெற்றும் தவெக ஆட்சியமைக்க விசிக தடையாக இருந்துவிடக் கூடாது என்ற 2 காரணங்களுக்காக மட்டுமே தவெகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வெளியில் இருந்து வழங்கியிருக்கிறோம் என்றார் விசிக தலைவர் தொல். திருமாவளவன்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக 108 இடங்களைக் கைப்பற்றினாலும் கூட, பெரும்பான்மை இல்லாததால் இதுவரை ஆட்சியமைக்க இயலாமல் தவித்த நிலையில், மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் தவெகவுக்கு விசிக ஆதரவு தெரிவித்துள்ளது. இதன்மூலம் அக்கட்சி பெரும்பான்மையை எட்டியது. தவெகவை தொடர்ந்து ஐயூஎம்எல் கட்சியும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியதால் தவெக வசம் தற்போது 120 எம்எல்ஏக்கள் பலம் உள்ளது.

இந்நிலையில், சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த திருமாவளவன் கூறியது: “தமிழகத்தில் தொங்கு சட்டசபை உருவாகும் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டது.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் விசிக இடம்பெற்று 8 தொகுதிகளில் போட்டியிட்டதில் 2ல் நாங்கள் வெற்றி பெற்றோம். அதேபோல் இடதுசாரிகளும் தலா 2 இடங்களில் வெற்றி பெற்றன.

இந்நிலையில் விசிக, இடதுசாரிகள் இணைந்து பேசினோம். மக்கள் நலக் கூட்டணி இருந்தபோதே கொள்கை அடிப்படையிலும், மக்கள் பிரச்சினைகளில் ஒருங்கிணைந்து களமாடி வருவதையும் பழக்கமாகக் கொண்டுள்ளோம்.

இந்தச் சூழலில் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்து முடிவெடுப்போம் என்று கலந்து பேசினோம். இந்த நிலையில் சிபிஎம், சிபிஐ மாநிலக் குழுவில் எடுத்த முடிவை ஒட்டி விசிக உயர்நிலைக் கூட்டத்தில் கலந்தாலோசித்து உயர்நிலைக் குழு ஒப்புதலோடு முடிவை அறிவிப்பது என முடிவு எடுத்தோம்.

முதலில் தவெகவுக்கு ஆதரவு என்ற முடிவை இடதுசாரிகள் எடுத்தார்கள். அதன் அடிப்படையில் விசிக உயர்நிலைக் கூட்டம் இணையவழியில் நடந்தது. உயர் நிலைக் கூட்டத்தில் பகிரப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், விசிக பொதுச் செயாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறப்பினரோடு கலந்தாலோசித்து ஒரு முடிவை எடுத்தோம். அதன் அடிப்படையில் தவெகவுக்கு ஆதரவுக் கடிதம் வழங்கியுள்ளோம்.

தமிழகத்தில் இந்த அரசியல் சிக்கலை பயன்படுத்தி குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்ற அடிப்படையிலும், 108 இடங்களோடு தவெக திணறிக் கொண்டிருக்கும் நிலையில் ஆதரவளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துள்ளோம்.

தவெக ஆட்சியமைக்க விசிக நிலைப்பாடு தடையாக இருந்துவிடக் கூடாது, குடியரசுத் தலைவர் ஆட்சி வரக் கூடாது என்ற இரண்டு காரணங்களால் மட்டுமே இந்த முடிவு எடுத்துள்ளோம்.

ஆட்சி அமைக்க மட்டுமே ஆதரவு அளிக்கிறோம். அதற்காக எந்த நிபந்தனையும் இல்லை. தவெகவுக்கு வெளியில் இருந்து ஆதரவு தருகிறோம்” என்றார். அவருடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியனும் இருந்தார்.

# “தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு வாழ்த்துகள்” - எடப்பாடி பழனிசாமி



சென்னை, மே.10–

‘தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்’ என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், ‘நடைபெற்று முடிந்த 17 வது தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தேர்தலில் பல்வேறு கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கூறியுள்ளார்.

தமிழகத்தில் பரபரப்பான அரசியல் சூழல் நீடிக்கும் நிலையில், பழனிசாமியின் இந்தப் பதிவு ஒரு ‘சிக்னல்’ ஆக கருதப்படுகிறது.

முன்னதாக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிய தவெக, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், முதலில் 5 எம்எல்ஏக்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது. 2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள விஜய், ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலையில், காங்கிரஸ் ஆதரவு மூலம் தவெக பலம் 112 ஆக உயர்ந்தது.

இதையடுத்து, ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநர் அர்லேகரை சந்தித்து, விஜய் கடிதம் வழங்கினார். ஆனால், ‘ஆட்சி அமைக்கத் தேவையான 118 உறுப்பினர்களின் பட்டியலை சமர்ப்பித்தால் மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று ஆளுநர் உறுதிபடத் தெரிவித்தார். பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் தலைவர்களை தவெக நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு கோரினர்.

இதன் தொடர்ச்சியாக, தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வந்த இடதுசாரி கட்சிகள், இறுதியில் தவெகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக நேற்று அறிவித்தன. இதற்கான அதிகாரப்பூர்வ ஆதரவுக் கடிதத்தை சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சிடிஆர். நிர்மல்குமாரிடம் அக்கட்சித் தலைவர்கள் வழங்கினர். இதன்மூலம் தவெக பலம் 116 ஆக உயர்ந்தது.

இதற்கிடையே ஐயூஎம்எல் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு அளித்துள்ளதாக தகவல் வெளியான நிலையில் அக்கட்சி இதற்கு மறுப்பு தெரிவித்தது. அதேபோல், விசிக தலைவர் திருமாவளவனுடனும் தவெகவினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத் தொடர்ந்து, இடதுசாரி தலைவர்கள் மற்றும் திமுக தலைவர் ஸ்டாலினுடன் திருமாவளவன் ஆலோசனை நடத்திய தாகவும் தகவல் வெளியானது. இந்நிலையில், தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பான தனது முடிவை இன்று மாலை தெரிவிக்கவுள்ளார் திருமாவளவன்.

முன்னதாக, நேற்று மாலை 7 மணி அளவில் ஆளுநர் மாளிகை சென்ற விஜய், ஆளுநர் அர்லேகரை 3வது முறையாக சந்தித்து, எம்எல்ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை வழங்கினார். அதன்பின்னர், தியாகராய நகரில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்ற விஜய், அங்கு அக்கட்சிகளின் தலைவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 இடங்கள் கிடைக்காத நிலையில், ஆட்சி அமைப்பது தொடர்பாக ஆளுநரிடம் இருந்து அழைப்பு விடுக்கப்படவில்லை. திருமாவளவன் தனது முடிவை இன்று மாலை அறிவிக்க உள்ளார். அதன் பிறகு, தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 எம்எல்ஏக்களின் ஆதரவு உறுதி செய்யப்பட்ட பிறகே, ஆளுநரிடம் இருந்து அழைப்பு வரும் என்று தெரிகிறது.

இதனிடையே, திமுக ஆதரவுடன் அதிமுக ஆட்சி அமைப்பதற்கான காய்நகர்த்தல்களை எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் மேற்கொண்டு வந்ததாக தகவல்கள் பரவி வந்தன. இப்பின்னணியில் புதிதாக அமையவுள்ள ஆட்சிக்கு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய அதிகாரிகள் தவறு இழைக்கக் கூடாது: ஐகோர்ட் நீதிபதி அறிவுரை

சென்னை, மே.10–

கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ள அதிகாரிகள் அதில் தவறு இழைக்கக்கூடாது என அறநிலையத்துறைக்கு உயர் நீதிமன்றம் அறிவுரை வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக திருத்தொண்டர் அறக்கட்டளை தலைவரான சேலம் ஏ.ராதாகிருஷ்ணன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், ‘சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அறுபத்து மூவர் உலா மற்றும் பிரம்மோற்சவம் போன்ற திருவிழாக்களின் வரவு செலவு கணக்கு விவரங்களை இந்து சமய அறநிலையத்துறையின் தணிக்கை பிரிவு அதிகாரிகள் தணிக்கை செய்து அறிக்கை அளித்துள்ளனர்.

அதில் கோயில் நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக பலமுறை புகார் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்த அறநிலையத்துறைக்கு உத்தரவிட வேண்டும்’ என கோரியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரரின் புகார் பரிசீலிக்கப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், என அறநிலையத்துறை தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. அதையடுத்து நீதிபதி, “அறநிலையத்துறையின் தணிக்கை குழு கோயில் நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாக என குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. அந்த குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அறநிலையத்துறை ஆணையரது கடமை. குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சட்டப்பூர்வ கடமையை துறப்பதற்கு சமம்.

கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ள அதிகாரிகள் அதில் தவறு இழைக்கக்கூடாது. எனவே, மனுதாரரின் புகாரை 12 வார காலத்துக்குள் பரிசீலித்து சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என அறிவுறுத்தி, வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டுள்ளார்.

# விஜய் முதல்வராவதை தடுக்கக் கூடாது: ஆளுநர் மாளிகை முன்பு தவெகவினர் போராட்டம்



சென்னை, மே.10–

தவெக தலைவர் விஜய் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்காத ஆளுநரை கண்டித்து, தவெக தொண்டர்கள் ஆளுநர் மாளிகை முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜயின் தவெக 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. இருப்பினும் ஆட்சி அமைக்க தேவையான 118 எம்எல்ஏக்கள் இல்லை.

இதனால், தவெகவால் ஆட்சி அமைக்க முடியாத சூழ்நிலை நிலவியது. இந்நிலையில், திமுக கூட்டணியிலிருந்து விலகி காங்கிரஸ் தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது.

அக்கட்சிக்கு 5 எம்எல்ஏக்கள் உள்ளதால் தவெக எம்எல்ஏக்களின் பலம் 113 ஆக உயர்ந்தது. இதைத் தொடர்ந்து விஜய் தமிழக ஆளுநரை இரண்டு முறை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

மேலும், பதவி ஏற்புக்கு பின் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிப்பதாக கூறினார். ஆனால், ஆளுநர் இதுவரையில் விஜய்யை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை. மேலும், திமுகவும், அதிமுகவும் கூட்டணி அமைத்து ஆட்சி பொறுப்புக்கு வர உள்ளதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவியது.

இந்நிலையில், விஜய்யை ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்காத ஆளுநரை கண்டித்து தவெக தொண்டர் ஒருவர் ஆளுநர் மாளிகை முன்பு நேற்று சங்கு ஊதி போராட்டத்தில் ஈடுபட்டார்.

விஜய் முதல்வராவதை தடுக்காதே, மறுக்காதே... மறுக்காதே... மக்கள் தீர்ப்பை மறுக்காதே, தடுக்காதே... தடுக்காதே விஜய் முதல்வராவதை தடுக்காதே என சங்கு ஊதி ஆக்ரோஷமாக முழக்கமிட்டார்.

இதையடுத்து, அங்கிருந்த போலீஸார் அவரை கைது செய்து அழைத்துச் சென்றனர். இதையடுத்து, விஜய்யை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுக்க கோரி தவெக தொண்டர் ஒருவர் ஆளுநர் மாளிகை முன்பு காவலரையிடம் உண்ணாவிரதம் மேற்கொள்ள முயன்றார். அவரை போலீஸார் கைது செய்து அப்புறப்படுத்தினர்.

இது ஒருபுறம் இருக்க விஜய்க்கு முதல்வராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க வலியுறுத்தி கையில் பதாகையை ஏந்தி தவெக தொண்டர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மேலும், ஒரு பெண், ஆளுநர் மாளிகை முன்பு வந்து, ‘நாடே அழுகிறது... விஜய் முதல்வராக வர வேண்டும்’ என கோஷமிட்டவாறு தவெக கொடியுடன் போராட்டத்தில் ஈடுபட்டார். இதுபோன்ற நிகழ்வுகளால் ஆளுநர் மாளிகை பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# ஐஎப்எஸ் இறுதி தேர்வு முடிவு வெளியீடு..! இந்திய அளவில் 148 பேர் தேர்ச்சி

## சென்னை மாணவி ரவி லட்சுமிபிரியா முதல் இடத்தை பிடித்தார்



சென்னை, மே.10–

ஐஎப்எஸ் தேர்வு முடிவு வெளியிடப்பட்டது. இந்திய அளவில் 148 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தமிழகத்தில் மட்டும் 17 பேர் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர். இதில் சென்னை மாணவி ரவி லட்சுமிபிரியா முதல் இடத்தை பிடித்துள்ளார்.

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) ஆண்டுதோறும் ஐஎப்எஸ் (இந்திய வனப்பணி) பணிக்கான சிவில் சர்வீஸ் தேர்வை நடத்துகிறது. 2025ம் ஆண்டுக்கான 150 பதவிகளை நிரப்புவதற்கான அறிவிப்பை வெளியிடப்பட்டது. முதலில் முதல்நிலை தேர்வு எழுத்து நடத்தப்பட்டது. தொடர்ந்து கடந்த ஆண்டு நவம்பர் 16 முதல் 23ம் தேதி வரை மெயின் தேர்வு நடத்தப்பட்டது. தொடர்ந்து இந்தாண்டு பிப்ரவரி மாதம் 25ம் தேதி மெயின் தேர்வுக்கான ரிசல்ட் வெளியிடப்பட்டது. இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு கடந்த ஏப்ரல் 6ம் தேதி முதல் ஏப்ரல் 15ம் தேதி வரை நேர்காணல் நடைபெற்றது. இந்த நிலையில் நேர்முக தேர்வு முடிந்து நேற்றிரவு யுபிஎஸ்சி தனது இணையதளத்தில் இறுதி தேர்வு முடிவை வெளியிடப்பட்டது. இதில், இந்தியா முழுவதும் 148 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 15 பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

இது குறித்து சங்கர் ஐஏஎஸ் அகாடமி நிர்வாக இயக்குனர் வைஷ்ணவி சங்கர் கூறியதாவது:

ஐஎப்எஸ் தேர்வுக்கான நேர்காணல் முடிவடைந்ததையடுத்து இறுதி தேர்வு முடிவை யுபிஎஸ்சி தனது இணையதளமான ஷ்ஷ்ஷ். ஞூஜீ உ நீ . ரீ ஷீ ஸ் . வீ ஸீ வெளியிட்டது. இந்திய அளவில் 148 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்ற 148 பேரில் 84 பேர் சங்கர் ஐஏஎஸ் அகடாமி மாணவர்கள். சென்னை, டெல்லி, பெங்களூர், திருவனந்தபுரம் மையங்களில் படித்தவர்கள். முதல் 10 இடங்களில் 6 இடங்களை எங்கள் மாணவர்கள் கைப்பற்றி உள்ளனர். தமிழ்நாட்டில் இருந்து மொத்தம் 17 பேர் வெற்றி பெற்றுள்ளனர். 14 மாணவர்கள் எங்கள் மையத்தில் படித்தவர்கள். தேர்ச்சி பெற்றவர்களில் இதில் 5 பேர் பெண்கள். எங்களது ஜிஎஸ்பிசிஎம் அறக்கட்டளை பாடநெறி மாணவியான ரவி லட்சுமிப்பிரியா, அகில இந்திய அளவில் 9வது இடத்தைப் பிடித்து, தமிழக அளவில் முதலிடம் பெற்றுள்ளார். இவர் சென்னை மாம்பலத்தை சார்ந்தவர் ஆவார்.

அகில இந்திய அளவில் சித்தார்த் அகில இந்திய அளவில் 3வது இடமும், ஆஞ்சல் சர்மா அகில இந்திய அளவில் 5வது இடமும், அனூப் ரெட்டி அகில இந்திய அளவில் 6வது இடமும், சங்கல்ப் தீட்சித் 8வது இடமும், ரவி லட்சுமிப்பிரியா 9வது இடமும், அஷ்வனி குமார் ராய் 10வது இடமும் பிடித்துள்ளனர். இவ்வாறு வைஷ்ணவி சங்கர் கூறினார்.

# தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு வாய்ப்பு இல்லை: சட்ட நிபுணர்கள்



சென்னை, மே.10–

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு வாய்ப்பு இல்லை என சட்ட நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். உரிய அவகாசம் அளித்த பிறகும், யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் மட்டுமே ஜனாதிபதி ஆட்சி அமையும். மே 11 முதல் தானாக குடியரசு தலைவர் ஆட்சி அமலுக்கு வரும் என்பது தவறு என சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.



# 2025-26 நிதியாண்டில் மதுரை ரயில்வே கோட்டம் ரூ.1,408.69 கோடி வருமானம் ஈட்டி புதிய சாதனை

மதுரை, மே.10–

மதுரை ரயில்வே கோட்டத்தில் 2025–26ஆம் நிதியாண்டில் மொத்த வருமானம் ரூ.1,408 கோடியாக உயர்ந்திருப்பதாக தெற்கு ரயில்வே அறிவித்து உள்ளது. 2025–26ஆம் நிதியாண்டில் மதுரை ரயில்வே கோட்டத்திற்கு கிடைத்துள்ள இந்த அதிக வருமானம் கடந்தாண்டை காட்டிலும் (ரூ.1,245 கோடியை விட) 13 சதவீதம் அதிகம் ஆகும்.

கடந்த நிதியாண்டில் மதுரை ரயில்வே கோட்டத்திற்கு மொத்தம் ரூ.1,408 கோடி வருமானம் கிடைத்துள்ள நிலையில், இதில் பயணிகள் பயணச்சீட்டு விற்பனை மூலம் மட்டும் ரூ.886.32 கோடி வருவாய் பதிவாகி இருக்கிறது. அதே நேரம் சரக்கு போக்குவரத்து மூலம் ரூ.411 கோடி வருவாய் கிடைத்து உள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 10% அதிகமாகும்.

இதர வருமானங்கள் என்கிற வகையில் பயணச்சீட்டு பரிசோதனை மூலம் ரூ.12.73 கோடி வசூலாகியுள்ளது. 97 சதவீத ரயில்களில் பயணச்சீட்டு பரிசோதனை நடத்தப்பட்டு, பயணச்சீட்டு இல்லாதோர் மற்றும் ரயில்வே சட்ட விதிகளை மீறியவர்களிடம் அபராதமாக ரூ.12.73 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது .உணவகச் சேவைகள் (Catering) மூலம் ரூ.7.92 கோடி வருவாய் கிடைத்துள்ளது, இது முந்தைய ஆண்டை விட 95.70% அதிகம் ஆகும். பார்சல் சேவைகள் மூலம் ரூ.10.78 கோடி வருமானம் கிடைத்துள்ளது.பழைய இரும்பு பொருட்கள் (ஸ்கிராப்) விற்பனை மூலம் ரூ.27.38 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த வருவாயானது தெற்கு ரயில்வே நிர்வாகம் நிர்ணயித்த ரூ.1,340 கோடி என்ற இலக்கை விட 5% கூடுதல் என்பது குறிப்பிடத்தக்கது

# “இத்தனை ஆண்டுகளில் பார்க்காத குதிரை பேரம்” தவெக மீது திமுக எம்.பி வில்சன் குற்றச்சாட்டு



சென்னை, மே.10–

இத்தனை ஆண்டுகளில் இல்லாத குதிரை பேர முயற்சிகளைத் தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது என திமுக எம்.பி. வில்சன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், ‘தமிழக அரசியலில் ‘மாற்றம்’ கொண்டு வரப்போவதாக அவர்கள் சொன்னதன் அர்த்தம் இப்போதுதான் எனக்குப் புரிகிறது. இத்தனை ஆண்டுகளில் இல்லாத குதிரை பேர முயற்சிகளைத் தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது. இத்தனையும் பதவியேற்பதற்கு முன்பே நடக்கிறது” என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 108 இடங்களில் வென்றுள்ள தனிப்பெரும் கட்சியான தமிழக வெற்றிக் கழகம் (தவெக), ஆட்சி அமைப்பதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. காங்கிரஸ் (5), இந்திய கம்யூனிஸ்ட் (2) மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் (2) கட்சியின் ஆதரவு தவெகவுக்கு கிடைத்துள்ளது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை அன்று ஆளுநர் அர்லேகரை நேரில் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார் தவெக தலைவர் விஜய்.

இந்தச் சூழலில் தவெக மீது பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார் டிடிவி தினகரன். தேர்தலில் ஒரே ஒரு தொகுதியில் வென்றுள்ள தங்கள் கட்சியின் எம்எல்ஏவான காமராஜ், அதிமுகவை ஆதரிப்பதாக ஆளுநர் அர்லேகரிடம் கடிதம் வழங்கினார்.

பின்னர், தங்கள் கட்சியின் எம்எல்ஏவை தன்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், அவரைக் காணவில்லை என்றும், குதிரை பேரத்தில் தவெக ஈடுபட்டுள்ளதாகவும் டிடிவி தினகரன் குற்றம்சாட்டினார். இதைத் தொடர்ந்து நள்ளிரவு சுமார் 12 மணி அளவில் ஆளுநர் மாளிகைக்கு வந்தார் அமமுக எம்எல்ஏ காமராஜ். தொடர்ந்து டிடிவி தினகரனும் அங்கு வந்திருந்தார். அப்போது பேசிய அமமுக எம்எல்ஏ காமராஜ், “நான் புதுச்சேரியில் தங்கி இருந்தேன். என்னுடைய மொபைல் எண்ணுக்கு மாலை 6 மணி அளவில் ஆளுநர் மாளிகையில் இருந்து அழைப்பு வந்தது. உடனடியாக இது தொடர்பாக வழக்கறிஞரிடம் பேசி, என்ன முடிவு செய்தோம். நான் தவெகவுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

அந்தக் கடிதம் வாட்ஸ்அப்பில் வந்துள்ளது. நான் பயன்படுத்துவது வாட்ஸ்அப் வசதி இல்லாத போன். அதனால் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் இந்த விவரம் தெரிய வந்ததும் ஆளுநர் மாளிகைக்கு நேரில் வருகை தந்து விவரத்தை தெரிவித்தோம்” என்று தெரிவித்தார்.

இதனையடுத்து காமராஜ் தனது கைப்பட கடிதம் எழுதும் வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




# விஜய் ஆட்சி அமைக்க ஐயூஎம்எல் ஆதரவு தவெக பலம் 120 ஆக உயர்வு

சென்னை:மே,10-

தமிழகத்தில் தவெக ஆட்சி அமைக்க விசிகவை தொடர்ந்து, ஐயூஎம்எல் கட்சியும் தனது ஆதரவை தெரிவித்துள்ளது. பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை எனும் நிலையில், தற்போது தவெகவின் பலம் 120 ஆக உயர்ந்துள்ளது.

தவெகவுக்கு ஐயூஎம்எல் ஆதரவு, ஆதரவு இல்லை என குழப்பம் நீடித்து வந்த நிலையில், ஐயூஎம்எல் தலைவர்கள் இன்று ஆதரவு கடிதத்தை தவெக நிர்வாகிகளிடம் வழங்கினர்.நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இடம்பெற்று பாபநாசம், வாணியம்பாடி ஆகிய இரண்டு தொகுதிகளில் முறையே ஏ.எம். ஷாஜஹான், சையது ஃபரூக் பாஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிய தவெக, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், முதலில் 5 எம்எல்ஏக்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது. 2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள விஜய், ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய நிலையில், காங்கிரஸ் ஆதரவு மூலம் தவெக பலம் 112 ஆக உயர்ந்தது.

மேலும், பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட் (2), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் (2) தனது ஆதரவை நேற்று தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து இன்று விசிக (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய கட்சிகள் தங்களது ஆதரவை தெரிவித்துள்ளனர். தற்போது தவெகவின் பலம் 120 ஆக உயர்ந்துள்ளது.




# கலெக்டர் சுகுமாரன் ஐஏஎஸ் பாராட்டு! கல்வியிலும் விளையாட்டிலும் 'எதிலும் முதலிடம்' என நிரூபித்த வி.எஸ்.ஆர். பள்ளி

திசையன்விளை மே.10-

கல்வி, ஒழுக்கம், விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதித்து வரும் திசையன்விளை வி.எஸ்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, 2025 26 ஆம் கல்வி ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சியுடன் மாநில அளவிலான சாதனையைப் படைத்துள்ளது.*மாநில அளவில் ஜொலிக்கும் காவியா:*இப்பள்ளியில் பயின்ற மாணவி காவியா 600க்கு 597 மதிப்பெண்கள் பெற்று, மாநில அளவில் இரண்டாம் இடத்தையும், திருநெல்வேலி மாவட்ட அளவில் முதலிடத்தையும் பிடித்து திசையன்விளைக்கே பெருமை சேர்த்துள்ளார்.

*சாதனைப் பட்டியல்:* வணிகவியல், பொருளியல், கணக்குப்பதிவியல் மற்றும் கணினி அறிவியல் ஆகிய நான்கு பாடங்களில் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்று மாணவி காவியா வியக்க வைத்துள்ளார்.*பள்ளி அளவிலான பிற வெற்றியாளர்கள்:* இரண்டாமிடம்: மாணவி ஜார்ஜ் மைக்கேல் கில்பியா (566 மதிப்பெண்கள்), மூன்றாமிடம்: மாணவி அந்தோணி ஏஞ்சல் மேரி (565 மதிப்பெண்கள்), மேலும், 10க்கும் மேற்பட்ட மாணவர்கள் 550க்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்று அசத்தியுள்ளனர்.மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமாரன் ஐஏஎஸ், மாநில அளவில் சாதனை படைத்த மாணவி காவியாவிற்கு நேரில் பொன்னாடை அணிவித்து, விருது வழங்கி வாழ்த்தியது குறிப்பிடத்தக்கது. பள்ளி முதல்வர் விஜயா தினகரன் மற்றும் ஆசிரியர்கள் இனிப்புகள் வழங்கி மகிழ்ந்தனர்.




■ பனிரெண்டாம் வகுப்பில் தமிழகத்திலேயே ஈரோடு மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது. ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் இதர கல்வித் துறை சேர்ந்த அதிகாரிகளை மாவட்ட ஆட்சியர் கந்தசாமி நேரில் அழைத்து விருந்தளித்து வாழ்த்து கூறினார்.

# வலது காலுக்கு பதில் இடது காலில் அறுவை சிகிச்சை

## ராஜஸ்தானில் மருத்துவர் வேறு பணிக்கு உடனடி மாற்றம்

ஜெய்ப்பூர்:மே,10-

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ள மதுர தாஸ்மாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சம்பா தேவி (66) என்ற பெண் தனது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்கு சிகிச்சை பெற வந்தார். அவரை பரிசோதித்த போது இரு காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. வலது காலில் அறுவை சிகிச்சை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் 27ம் தேதி சம்பா தேவிக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இந்நிலையில் எலும்பியல் நிபுணர் ராமகிருஷ்ணன் சவுத்ரி, வலது காலுக்கு பதிலாக இடது காலில் அறுவை சிகிச்சை மேற்கொண்டார். அறுவை சிகிச்சைக்குப் பின்பே இது தெரியவந்தது.

இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகம் சிறப்புக் குழு அமைத்து விசாரணை நடத்தியது. அறுவை சிகிச்சையின் போது பின்பற்றப்படும் நிலையான செயல்பாட்டு விதிமுறைகளை (எஸ்ஓபி) பின்பற்றாமல், கவனக்குறைவாக தவறான காலில் அறுவை செய்தது தெரிய வந்தது. இதையடுத்து, மருத்துவர் ராமகிருஷ்ணன் சவுத்ரி பணியில் இருந்து உடனடியாக நீக்கப்பட்டு, மருத்துவக் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டார்

# சிக்னலில் செயின் பறித்த மர்ம நபர்கள்! ஒரே சட்டையில் சிக்கிய திருடன்; வில்லியனூர் போலீஸ் 'மாஸ்' ஆக்ஷன்

வில்லியனூர் மே,10-

வில்லியனூர் பைபாஸ் சாலையில் சிக்னலுக்காகக் காத்திருந்த பெண்ணிடம் தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்ற இரண்டு கில்லாடித் திருடர்களை வில்லியனூர் போலீசார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.வில்லியனூர் பைபாஸ் சாலை சிக்னலில் இருசக்கர வாகனத்தில் தனது கணவருடன் அமர்ந்திருந்த ஒரு பெண்ணிடமிருந்து, மின்னல் வேகத்தில் வந்த மர்ம நபர்கள் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியைப் பறித்துக் கொண்டு தப்பினர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.*போலீசாரின்



'ஸ்கெட்ச்':*மேற்கு காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணியன் உத்தரவின் பேரில், பயிற்சி ஐபிஎஸ் அதிகாரி கதிரவன் மேற்பார்வையில், வில்லியனூர் காவல் ஆய்வாளர் கலைச்செல்வன் மற்றும் உதவி ஆய்வாளர் திருமுருகன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது. சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தபோது, குற்றவாளிகளின் முகம் மற்றும்அவர்கள் அணிந்திருந்த சட்டை தெளிவாகத் தெரிந்தது.

*சட்டையால் சிக்கிய திருடன்:*கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு, வில்லியனூர் புதுச்சேரி புதிய பைபாஸ் சாலை அருகே குற்றப்பிரிவு காவலர்கள் ரங்கராஜ், ராஜரத்தினம் பிரபு, சதீஷ் மற்றும் அய்யனார் ஆகியோர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் வந்த நபரை நிறுத்திச் சோதித்தனர். சுவாரஸ்யமாக, செயின் பறிப்புச் சம்பவத்தின் போது சிசிடிவியில் பதிவான அதே சட்டையுடன் அந்த நபர் வலம் வந்ததைக் கண்ட போலீசார், அவரை மடக்கிப் பிடித்தனர். அவரிடம் நடத்திய கிடுக்கிப்பிடி விசாரணையில், அவரும் அவரது கூட்டாளியும் சேர்ந்து செயின் பறிப்பில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டனர்.

# மருத்துவர் கனவை நிறைவேற்ற 71 வயதில் நீட் தேர்வு எழுதிய முதியவர்

லக்னோ:மே,10-

உத்தர பிரதேசம் லக்னோவில் 71 வயது முதியவர் ஒருவர் நீட் தேர்வுக்கு விண்ணப்பித்து தேர்வு எழுதியுள்ளார்.

உத்தர பிரதேசம் லக்னோவைச் சேர்ந்தவர் அசோக் பாஹர்(71). உத்தராகண்டில் உள்ள இந்திய மருந்துள் நிறுவனத்தில் (ஐடிபிஎல்) மார்க்கெட்டிங் பிரிவு தலைவராகவும், வெளியுறவுத்துறையில் ஆலோசகராகவும் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றுள்ளார். இவரது மனைவி டாக்டர். மஞ்சு பாஹர் மகப்பேறு மருத்துவர்.

அசோக் பாஹரின் தந்தையும் லக்னோவில் பிரபல மருத்துவராக இருந்தவர். அதனால் இவரும் மருத்துவராக வேண்டும்



என இவரது தாய் விரும்பியுள்ளார். ஆனால், மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளில் இவரால் வெற்றி பெற முடியவில்லை. இவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் சுமார் 20 பேர் மருத்துவர்களாக உள்ளனர். பலர் வெளிநாடுகளில் பணியாற்றுகின்றனர்.அதனால் தனது மருத்துவர் கனவை நிறைவேற்ற 71 வயதில் நீட் தேர்வு எழுதியுள்ளார் அசோக் பாஹர். இவர் மருத்துவராகி ஹெபடாலஜி படிப்பை முடித்து கல்லீரல் நோய் நிபுணராக வேண்டும் என விரும்புகிறார். 71 வயதில் இவர் நீட் தேர்வு எழுதும் செய்தி சமூக ஊடகங்களில் வேகமாக பரவியது. பலர் இவரது முயற்சியை ஊக்குவித்தாலும், சிலர் இந்த வயதில் மருத்துவப் படிப்பது வீண், காலம் கடந்த செயல் என்றும் மற்றொருவரின் மருத்துவர் சீட் வாய்ப்பை கெடுப்பது போன்றது எனவும் தங்கள் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

# "விபி ஜி ராம் ஜி திட்டம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை" கார்கே குற்றச்சாட்டு

புதுடெல்லி:மே,10-

கிராமப்புற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் மத்திய அரசின் 'விபி ஜி ராம் ஜி' (VB GRAM G) திட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை மோடி அரசு முழுமையாக கொல்வதற்கு முன்பாகவே, வேலை செய்வதற்கான உரிமையை நசுக்கி, கோடிக்கணக்கான ஏழை மக்களை துன்புறுத்தி வருகிறது.சமீபத்திய அறிக்கையின்படி, 44 லட்சம் குடும்பங்களுக்கு குறைவாகவே வேலை கிடைத்துள்ளது. 67 லட்சம்



தொழிலாளர்களுக்கு குறைவாகவே வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. முழுமையாக 100 நாட்கள் வேலைவாய்ப்பைப் பெற்ற குடும்பங்கள் 40.5% ஆக குறைந்துள்ளது. வேலை செய்வோரின் எண்ணிக்கையில் 21.5% சரிவு ஏற்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒவ்வொரு குடும்பமும் சராசரியாக ரூ.1,221 வருமான இழப்பைச் சந்தித்துள்ளது.

வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டமான 'விபி ஜி ராம் ஜி' திட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால், தொழிலாளர்கள் செய்வதறியாது அலைந்து திரியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஒருபுறம் மாநிலங்களுக்குச் சேர வேண்டிய கோடிக்கணக்கான ரூபாயை பாஜக அரசு நிறுத்திவைத்துள்ளது. மறுபுறம், ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவிக்கும் மாநிலங்கள் மீது 40% நிதிச் சுமையை அது சுமத்தியுள்ளது.குறிப்பிட்ட சில முதலாளிகளின் நண்பனாக இருக்கும் பாஜக அரசு, ஏழைகளின் உரிமைகளை நசுக்குவதில் முழுமையாக ஈடுபட்டுள்ளது. ஏழைகள் மீது அவர்களுக்கு இருக்கும் உண்மையான எண்ணத்தை இது அம்பலப்படுத்துகிறது" என தெரிவித்துள்ளார்.

# ஆளுநர் மாளிகை நோக்கி ஹேப்பியாக பறந்த விஜய்க்கு ஷாக்..! சட்டென்று அடித்த யூ டர்ன்.. கவர்னர் சந்திக்க மறுப்பு

சென்னை: மே,10-

விடுதலை சிறுத்தைகள் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகள் ஆதரவளித்துள்ள நிலையில், ஆளுனரை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரலாம் என்று மகிழ்ச்சியுடன் ராஜ்பவன் நோக்கி விரைந்த விஜய் கார் திடீரென யூ டர்ன் போட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.Urban Transit

ஆளுநர் மாளிகை நோக்கி சென்று கொண்டிருந்த விஜய் கார், அடையாறு அருகே சென்று கொண்டிருந்த போது திடீரென ராஜ்



பவன் நோக்கி செல்லாமல் யூ டர்ன் அடித்தது. யூடர்ன் அடித்து மீண்டும் பட்டினப்பாக்கம் நோக்கி விஜய் வாகனம் செல்ல காரணம் ஆளுநர் கேரளம் செல்வதே என தகவல் வெளியாகி இருக்கிறது.

ஆட்சியமைக்க தேவையான மெஜாரிட்டி கடிதத்துடன் ஆளுநர் மாளிகை புறப்பட்ட விஜய், தேர்தல் முடிவுக்கு பின் 4வது முறையாக ஆளுநரை சந்திக்க சென்றார். இந்த நிலையில் கேரளம் செல்வதால் ஆளுநர் விஜயை சந்திக்க நேரம் ஒதுக்கவில்லை என்ற தகவல் கிடைத்ததை தொடர்ந்து, ஆளுநர் உடனான விஜய் சந்திப்பு ரத்தாகி உள்ளது. ஆளுநர் கேரளா செல்வதால் ஓரிரு நாட்களுக்கு பின்பே விஜய்யை சந்திக்க நேரம் ஒதுக்கும் வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது



■ கடந்த 2024 ஆம் ஆண்டு நடந்த புதுச்சேரி முத்தியால்பேட்டை சிறுமி பாலியல் கொலை வழக்கில், வாலிபர் கருணாஸ் என்ற குற்றவாளிக்கு தூக்கு தண்டனை விதித்து போக்சோ சிறப்பு நீதிமன்றம் நீதிபதி சுமதி தீர்ப்பு வழங்கினார்.

# தவெக கிளைக்கழக செயலாளர் தீக்குளிப்பு

திருநெல்வேலி,மே,10-

திருநெல்வேலி மாவட்டம் செட்டிகுளம் அருகேயுள்ள புதுமை கிராமத்தைச் சேர்ந்தவர் இசக்கியப்பன் (47). இவர் தமிழக வெற்றி கழகத்தின் கிளைக் கழக செயலாளராகப் பணியாற்றி வருகிறார். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு, தனது கட்சியின் தலைவர் விஜய்



தமிழக முதல்வராக வேண்டி, சுமார் 16 அடி நீளம் கொண்ட வேலை அலகாகக் குத்திக் கொண்டு நேர்த்திக்கடன் செலுத்தித் தனது தீவிரப் பற்றை வெளிப்படுத்தியிருந்தார். இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் முதல்வர் ஆக முடியாத சூழல் நிலவி வருவதாகக் கருதி மனமுடைந்த இசக்கியப்பன், நேற்று திடீரென உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீக்குளிக்க முயன்றார். இதில் பலத்த காயமடைந்த அவர், தற்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000